கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:31.05.2024
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்

## ஒருங்கிணைந்த இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2024 –2025

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இந்தியாவின் முன்னோடி வேளாண்மை நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த கல்வியாண்டு முதல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கும் (TNAU), தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கும் (TNJFU) மற்றும் வேளாண்மைப் பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் (AU) ஒரே விண்ணப்பம் வழியாக இளமறிவியல் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. இக்கல்வியாண்டில் **14** இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும், **4** பட்டயப்படிப்புகளுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் **6** இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும் மற்றும் **மூன்று** தொழில்முறை பாடப்பிரிவுகளுக்கும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு இளமறிவியல் (வேளாண்மை) மற்றும் இளமறிவியல் (தோட்டக்கலை) பாடப்பிரிவுகளுக்கு ஒருமித்த வகையில் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள **14** இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கு 5361 இடங்களுக்கும், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு 371 இடங்களுக்கும் மற்றும் வேளாண்மைப் பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் 340 இடங்களுக்கு மாணவர் சேர்க்கை நடைபெறும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் பட்டயப்படிப்புகளுக்கு **1290** இடங்களுக்கு மாணவர் சேர்க்கை நடைபெறும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 07.05.2024 முதல் இணையதள வாயிலாக http://tnagfi.ucanapply.com இந்த ஒருங்கிணைந்த மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பத்தை பெற்று வருகிறது. பூர்த்தி செய்த இந்த ஒருங்கிணைந்த மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு 06.06.2024 இறுதி நாளாகும்.

இன்று வரை, மொத்தம் 23,248 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இணையதளத்தில் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட விண்ணப்பங்களின் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | பல்கலைக்கழகம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைப் பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 7553 |
| 2 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் | 1741 |
| 3 | தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் | 584 |
| 4 | தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைப் பிரிவு, அண்ணாமலைப்பல்கலைக்கழகம் | 289 |
| 5 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 4087 |
| 6 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண்மைப் பிரிவு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் | 8993 |
| | மொத்தம் | **23,248** |

மேலும், மொத்தம் **5177** மாணாக்கர்கள் தங்கள் இளமறிவியல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க உள்ளனர். முழுமையாக பூர்த்தி செய்து பெறப்பட்ட 23,248 விண்ணப்பங்களில் 14,384 பேர் மாணவிகள் ஆவர், மாணவர்களுடைய எண்ணிக்கை 8,864 ஆகவும் உள்ளது. பட்டயப்படிப்பிற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2,153 இன்றுவரை பெறப்பட்டுள்ளன.

மாணாக்கர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 06.06.2024 க்கு முன்பு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாணாக்கர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் (email) மூலமாகவும் 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் வார நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*